# அரசியல்துறை
# தமிழீழ விடுதலைப் புலிகள்

**04.02.2024**
**தமிழீழம்.**

## சிறிலங்காவின் சுதந்திரநாள் தமிழர்களின் கரிநாள்.

**அன்பார்ந்த எமது மக்களே!**

பிரித்தானிய ஆட்சியின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரம் 04.02.1948 இல் சிங்களவர்களிடம் கையளிக்கப்பட்டது. அன்றைய நாளே ஈழத்தமிழர்களின் உரிமை முழுமையாக மறுக்கப்பட்ட நாளாகவும் ஆனது. ஆட்சியுரிமை சிங்களவர் கைக்கு வந்ததும் தமிழரின் மொழி, இன, ஆளுமை உரிமைகளுக்குப் படிப்படியாகத் தடைகள் வந்தன.

அந்நியரின் வருகைக்கு முன்பு ஈழத்தமிழர்களின் இராட்சியம் தமிழ் மன்னர்களாலேயே ஆளுகை செய்யப்பட்டது. இலங்கைத் தீவை அடிமைப் படுத்திய அந்நியர்கள் தமது ஆளுகை வசதிக்காக ஒரே அலகாக இலங்கைத்தீவை மாற்றினர். அதன் விளைவு இன்று எம் தமிழினம் எமது சொந்த மண்ணிலேயே வாழ்வதற்காக போராட வேண்டிய நிலை உள்ளது.

1948 ற்குப் பின்னர் அறவழியில் ஆரம்பித்த எமது விடுதலைப்பயணம் ஆயுதப்போராட்டமாக மாறி மண்மீட்புப் போரில் வெற்றியின் எல்லையைத் தொட்டிருந்த வேளை பல வல்லரசு நாடுகளின் உதவியுடன் அப்போராட்டம் 2009 இல் முடக்கப்பட்டது. இருந்தபோதும் அறவழிப்போராட்டமாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது.

உலகின் பல்வேறு நாடுகள் இலங்கைத்தீவில் யுத்தம் நிறுத்தப்பட்டால் தமிழ் மக்களின் உரிமையினை பெற்றுக்கொள்வதற்கான சமரச முயற்சி செய்வதாகக் கூறின. ஆனால் இன்று ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டு 15 ஆண்டுகளை எட்டுகின்ற நிலையில் இலங்கைத்தீவின் இறைமையில் தலையிடமுடியாதென பாராமுகம் காட்டுகின்றன. எமது இனத்தின் இறைமையினையும் அதன் பாதுகாப்பினையும் உறுதி செய்து எமது சொந்த மண்ணிலேயே உரிமையோடு வாழ வழிசெய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பினை பிரித்தானியா உட்பட உலகநாடுகளே ஏற்கவேண்டும்.

இலங்கைத்தீவில் நிகழ்ந்த தமிழின அழிப்பிற்கும் யுத்தக் குற்றத்திற்கும் நீதி கோரியும், நிகழ்ந்துகொண்டிருக்கும் திட்டமிட்ட இனவழிப்பு நடவடிக்கைகளை நிறுத்தக்கோரியும் எமது மக்கள் தொடர்ந்தும் பேரினவாத சிங்கள அரச இயந்திரத்தை எதிர்கொண்டு தன்னெழுச்சியுடன் தாயகத்திலும், புலத்திலும் போராடி வருகின்றனர்.

இந்தக் காலச் சூழமைவில் உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் புலம்பெயர் ஈழத்தமிழர்களே தாயக விடுதலைக்கான மிகப்பெரும் "அரசியற் சக்தி" என்பதை மனதிற்கொண்டு துணிவுடன் அறவழிப்போராட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். தேசவிடுதலை நோக்கிய உயரிய பணியை முன்னெடுத்துச்செல்லும் அனைத்து தமிழீழ விடுதலைக்கான ஆதரவு அமைப்புகளோடு அனைத்து மக்களும் இணைந்து தோள் கொடுப்பதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சிங்கள தேசத்திலிருந்து ஒரு நீதியான, நியாயமான தீர்வு ஒருபோதும் கிடைக்கப்போவதில்லை. எமக்கே உரித்தான எமது அடிப்படை உரிமைகளை நாமாகவே போராடி வென்றெடுப்போம்.

இலங்கைத்தீவில் தமிழர் உரிமை மறுக்கப்பட்ட நாளான இன்று சிங்கள இனப்படுகொலை ஆட்சியாளர்களை சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்தி தாயக விடுதலைக்கான தீர்வை பெற்றுக்கொள்ள உறுதியெடுத்துக் கொள்வோம். எமது தாயகம் விடுதலை பெறும்வரை எமது விடுதலைப்பயணத்தை தொடர்ந்து முன்னெடுப்போம்.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

வி. ஜெயாத்தன்

வி. ஜெயாத்தன்
04/02/24
.........................

பொறுப்பாளர்
அரசியல்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தொடர்புகளுக்கு :- தொ.எண் : 00447414466757. மின்னஞ்சல் : politicaltamileelam@gmail.com